(அ) மதுரையிலிருந்து மானாமதுரை, தே. புதுக்கோட்டை, குதிர்பி, முனைவென்றி, இளையான்குடி வழியாக சாலைக்கிராமம் வரை புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தே. புதுக்கோட்டைக்கு அரசுப் பேருந்துமூலம் 24 தனி நடைகளும், தனியார் பேருந்துமூலம் 8 தனி நடைகளும் மொத்தம் நாள் ஒன்றுக்கு 32 தனி நடைகளும், பரமக்குடியிலிருந்து முனைவென்றிக்கு 22 தனி நடைகளும், பரமக்குடியிலிருந்து இளையான்குடிக்கு 40 தனி நடைகளும், இளையான்குடியிலிருந்து சாலைக் கிராமத்திற்கு தனியார் பேருந்து மற்றும் அரசுப் பேருந்துமூலம் 38 தனி நடைகளும் என பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி, வழித்தடம் புதிய வழித்தடமாக இருப்பதால் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

230—

பேருந்து வசதி

வினா எண் 1067—திரு. அருணாபரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பேருந்து நிலையத்திலிருந்து சித்தர்கோவில் மற்றும் எலம்பிள்ளை பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து சித்தர்கோவில், எலம்பிள்ளை வழித்தடத்தின் நீளம் 20 கி.மீ. இவ்வழித்தடத்தில்

அரசு நகரப் பேருந்து 15-ன் மூலம் இயக்கப்படும் பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது. எனவே, புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

231—

விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 2083—திரு. எஸ்.டி. வெங்கடாசலம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெருந்துறை தொகுதி, பெருந்துறையில் போக்குவரத்துத் துறை சார்பில் உள்ள மருத்துவக் கல்லூரியில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த வங்கிப் பிரிவு இவற்றை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த வங்கிப் பிரிவுகள் 1992 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

232—

பேருந்து வசதி

வினா எண் 2087—திரு. எஸ்.டி. வெங்கடாசலம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெருந்துறையிலிருந்து திருப்பூர் மற்றும் கோவைக்கு பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெருந்துறை வழியாக திருப்பூருக்கு ஈரோடு-திருப்பூர் மற்றும் சேலம்-திருப்பூர் ஆகிய தடங்களில் தினசரி தமிழ்நாடு அரசுப்

போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., மூலம் 28 தனி நடைகளும், [illegible] போக்குவரத்துக் கழகங்கள்மூலம் 25 தனி நடைகளும், தனியார் துறை பேருந்துகள்மூலம் 142 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. பேருந்துறை வழியாக திருப்பூருக்கு போதிய பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளதால் புதிதாக இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

233—

விரைவுப் பேருந்து வசதி

வினா எண் 2106—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவையிலிருந்து சிதம்பரத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக தடம் எண் 722-ல் கட்டப்பனையிலிருந்து-புதுச்சேரிக்கு கோயம்புத்தூர், சிதம்பரம் வழியாக தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் விதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்து வசதியை கோயம்புத்தூரிலிருந்து சிதம்பரம் செல்லும் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், கோயம்புத்தூரிலிருந்து சிதம்பரத்திற்கு செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி தடத்தில் நேரடிப் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோவையிலிருந்தும் சிதம்பரத்திற்கு 2 பேருந்துகள் தினசரி 2 நடைகள் இயக்கி வருகிறது.

234—

பேருந்து வசதி

வினா எண் 2561—திருமதி எஸ். கவிதா சம்பத்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*